සබරගමුව පළාත් අධ්‍යාපන දෙපාර්තමේන්තුව
சபரகமுவ மாகாண கல்வித் திணைக்களம்
Sabaragamuwa Provincial Department of Education

**තෙවන වාර පරීක්ෂණය 2020** **11 ශ්‍රේණිය**
**மூன்றாம் தவணைப் பரீட்சை 2020** **தரம் 11**
**Third Term Test 2020** **Grade 11**

තොරතුරු හා සන්නිවේදන තාක්ෂණය **I**
**தகவல் தொடர்பாடல் தொழினுட்பவியல் I**
**Information and Communication Technology I**

පැය එකයි
**ஒரு மணித்தியாலம்**
***One hour***

கவனிக்க

- எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக.
- 1 தொடக்கம் 40 வரையுள்ள வினா ஒவ்வொன்றிலும் (1), (2), (3), (4) என இலக்கமிடப்பட்ட விடைகளில், சரியான அல்லது மிகப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.
- உமக்கு வழங்கப்பட்டுள்ள விடைத்தாளில் ஒவ்வொரு வினாவுக்கும் உரிய வட்டங்களில் உமது விடையின் இலக்கத்தை ஒத்த வட்டத்தினுள்ளே புள்ளடியை (x) இடுக.
- காலம் 1 மணித்தியாலம்


01. ‘தரவு’ மற்றும் ‘தகவல்’ பற்றிய கூற்றுக்களில் தவறானது
   a. முடிவுகளை எடுக்க தரவைப் பயன்படுத்தலாம், ஆனால் தகவல்களை பயன்படுத்த முடியாது.
   b. சரியான முடிவுகளை எடுக்க தரவு மற்றும் தகவல் இரண்டையும் பயன்படுத்தலாம்.
   c. சரியான முடிவுகளை எடுக்க தகவல்களை மட்டுமே பயன்படுத்த முடியும்.

   i) a மட்டும் ii) b மட்டும் iii) a , b மட்டும் iv) a,b ,c எல்லாம்

02. சுபுன் கடந்த ஆண்டின் க.பொ.த சாதாரண தரப் பரீட்சையில் 9A சித்திகளைப் பெற்றதனால், அவரது உறவினர்கள் மற்றும் நண்பர்கள் அனைவரும் அவரது வெற்றியைப் பாராட்டினர், ஆனால் இப்போது யாரும் அவரை பாராட்டுவதில்லை. மேற்குறிப்பிட்ட கூற்றில் விவரிக்கப்பட்டுள்ள தகவலின் பண்பு யாது
   i) பொருத்தம் ii) நம்பகத்தன்மை
   iii) காலத்திற்கு பொருத்தமாய் இருத்தல் iv) செம்மை

03. மூன்றாம் தலைமுறை கணினிகளின் இரண்டு சிறப்பியல்புகள் முறையே,
   i) நுண்முறை வழியாக்கி மற்றும் சிறிய கொண்டு செல்லக் கூடிய சாதனங்களின் பயன்பாடு.
   ii) ஒருங்கிணைப்பு மொழி மற்றும் துளை அட்டைகளின் பயன்பாடு.
   iii) விசைப்பலகைகள் மற்றும் கணினித் திரைகளின் பயன்பாடு.
   iv) குறைக்கடத்தியுள்ள வலையமைப்புச் சாதனங்கள் மற்றும் தேக்கச் சாதனங்களின் பயன்பாடு.

04. ஒரு பேச்சாளரால் வெளியிடப்பட்ட ஒலி அலையின் வடிவம் பின்வரும் பட வரைபு மூலம் காட்டப்பட்டுள்ளது. இவ் வரைபடம் எவ் வகையான சைகையை விளக்குகிறது?
   i) ஒத்திசை சைகை
   ii) எண்சைகை
   iii) இலக்கமுறைசைகை
   iv) கலப்பு முறைசைகை




05. ஒரு நிறுவனத்தில் பணிபுரியும் மூன்று தொழிலாளர்கள் ஒவ்வொருவரும் அச்சுப்பிரதியை எடுக்க விரும்புகிறார்கள். அந்நிறுவனத்தில் ஒரு அச்சுப்பொறி மாத்திரமே இருப்பின் அவர்கள் அச்சுப்பிரதியை பெற்றுக் கொள்வதற்கு பொருத்தமான தீர்வு யாது?
   i) USB குவியத்தினூடாக அச்சுப்பொறியை இணைத்தல்
   ii) மூன்று தொழிலாளர்களிடமிருந்து சம தூரத்தில் அச்சுப்பொறியைக் வைத்தல்
   iii) பளிச்சீட்டு நினைவகத்தை பயன்படுத்தல்
   iv) வலையமைப்பு ஆளியைப் பயன்படுத்தி அச்சுப்பொறி மற்றும் கணினிகளை வலையமைப்புச் செய்தல்.

06. ஒரு மாணவர் கணினியுடன் இணைக்கப்பட்டிருக்கும் பளிச்சீட்டு நினைவகத்திலுள்ள ஆவணத்தைத் திறந்து திருத்திக்கொண்டிருந்தார். திறக்கப்பட்ட ஆவணம் வைக்கப்பட்டிருக்கும் கணினி நினைவகம் யாது?

i) வன் வட்டு
ii) தற்போக்கு பெறுவழிநினைவகம்(RAM)
iii) பளிச்சீட்டு நினைவகம்
iv) வாசிப்பு மட்டும் நினைவகம் (ROM)

07. கணினி சாதனங்களை இணைக்கும்போது,விசைப்பலகை ..........**a**................ ஊடாக இணைக்கப்படும், கணினியானது வலையமைப்புடன்............**b**.............ஊடாக இணைக்கப்படும், பல்லூடக எறிவை ...............**c**............ ஊடாக இணைக்கப்படும். மேலே உள்ள இடைவெளிக்கு பொருத்தமான சொற்கள் முறையே

i) HDMI துறை, அகில தொடர்ப்பாட்டைத் துறை, RJ 45துறை

ii) அகில தொடர்ப்பாட்டைத் துறை, RJ 45 துறை, HDMIதுறை

iii) PS /2 துறை, அகில தொடர்ப்பாட்டைத் துறை, HDMI துறை

iv) HDMI துறை, RJ 45 துறை, ஒளியிருத் துறை

08.   தரவு பரிமாற்றத்திற்கு ஊடகங்கள் பயன்படுத்தப்படுகின்றன. கீழே காட்டப்பட்டுள்ள இரண்டு தரவு பரிமாற்ற முறைகளும் பயன்படுத்தும் பரிமாற்ற ஊடகம் யாது?

i) ஒளியியல் நார்கள்
ii) வானொலி அலைகள்
iii) நுண் அலைகள்
iv) செங்கீழ் கதிர்கள்

09. கணினி திரை தொடர்பான பின்வரும் கூற்றுக்களை கருதுக

a) ஒளிகாலும் இருவாயி(LED) கணினி திரைகள் , திரவ பளிங்கு காட்சி (LCD) கணினி திரைகளை விட அதிக மின்சாரத்தை பயன்படுத்துகின்றன.
b) கதோட்டு கதிர் குழாய் (CRT) கணினி திரைகள் , ஒளிகாலும் இருவாயி (LED) கணினி திரைகளைவிடவும் விரைவாக தகவலை திரையில் காட்சிப்படுத்தும்
a) நவீன கையடக்கத் தொலைபேசிகள், கதோட்டு கதிர் குழாய் தொழில்நுட்பத்தை பயன்படுத்துகின்றன..

மேற்குறிப்பிட்ட கூற்றுகளில் சரியானது / சரியானவை


i) a மட்டும் ii) b மட்டும் iii) a , b மட்டும் iv) a,b ,c எல்லாம்

10. சொல்முறை வழிப்படுத்தல் மென்பொருளைப் பயன்படுத்தி எதிர்வரும் வெள்ளிக்கிழமை நடைபெறவுள்ள தரம் 11 பெற்றோர்-ஆசிரியர்கள் கூட்டத்தினை பெற்றோருக்கு தெரியப்படுத்தும் அறிவிப்பு கடிதத்தைத் தயாரிக்க முடிவு செய்யப்பட்டுள்ளது. ஒரே கடிதத்தை வெவ்வேறு முகவரிகளுக்கு அனுப்ப சொல்முறை வழிப்படுத்தல் மென்பொருளில் வழங்கப்பட்டுள்ள வசதி எது?

i) எல்லைகள்(Margin)
ii) மொழிமாற்றுதல் (Translate)
iii) கலங்களை இணைத்தல்(Merge Cells)
iv) அஞ்சல் ஒன்றிணைப்பு (Mail merge)

11. தரப்பட்டுள்ள உரு 02 இல் எந்த வலையமைப்பு இடவியல் வடிவமைக்கப்பட்டுள்ளது?

i) பாட்டை வடிவம்
ii) மரவடிவம்
iii) வளைய வடிவம்
iv) உடுவடிவம்



உரு *02*

12. பின்வருவனவற்றில் எது அழிதகு நினைவக சாதனங்களை மாத்திரம் கொண்டது
   i) தற்போக்குபெருவழி நினைவகம்(RAM), வாசிப்பு மட்டும் நினைவகம்(ROM), பதுக்கு நினைவகம்
   ii) தற்போக்குபெருவழி நினைவகம்(RAM), வாசிப்பு மட்டும் நினைவகம்(ROM), வன்வட்டு
   iii) தற்போக்குபெருவழி நினைவகம் (RAM); இருவட்டு (CD), பளிச்சீட்டு நினைவகம்
   iv) தற்போக்குபெருவழி நினைவகம்(RAM), பதுக்கு நினைவகம், நினைவக பதிவகம்


13. பின்வருவனவற்றில் எது Unicode, BCD, ASCII, EBCDIC குறிமுறைகளில் ஒரு குறியீட்டை வகைகுறிக்க பயன்படுத்தப்படும் பிட் எண்ணிக்கையின் சரியான அளவை முறையே காட்டுவது

   i) 8,4,7உம்16   ii) 16,8,4உம் 4   iii) 16,4,7உம் 8   iv) 7,7,7உம்7

14. கடந்த ஆண்டு க.பொ.த. சாதாரண தர பரீட்சை எழுதிய ஹிருஷா , உயர் தரத்தில் தொழில்நுட்ப பிரிவில் படிக்க எதிர்பார்க்கிறார். அவருக்கான பாடங்களைத் தெரிவு செய்யும் போது,தொழில்நுட்பத்திற்கான அறிவியல் (SFT) ஒரு கட்டாயப் பாடமாகவும், அதே நேரத்தில் பொறியியல் தொழில்நுட்பம் (ET) அல்லது உயிரியல் தொழில்நுட்பம் (BST) பாடங்களில் ஏதேனும் ஒன்றும் தெரிவு செய்யப்பட வேண்டும். அவர் தகவல் தொடர்பு தொழில்நுட்பத்தை (ICT)பாடத்தை நிச்சயமாக தெரிவு செய்வார். மேற்குறித்த நிகழ்வை மிகத் துல்லியமாக விளக்கும் பூலியன் கோவை யாது?

   i) SFT AND ICT OR (ET AND BST)   ii) SFT AND ICT AND (ET OR BST)
   iii) SFT AND (ET AND BST AND ICT)   iv) SFT AND (ET OR BST OR ICT)


15. உரு03 இல் காட்டப்பட்டுள்ள தர்க்க சுற்றின் வருவிளைவு F ஆனது 0 எனின் பின்வருவனவற்றில் எது X , Y எனும் உள்ளீட்டுகளின் பெறுமானங்களை முறையே வகைகுறிப்பது?




   i) 1 , 1
   ii) 0 , 0
   iii) 1 , 0
   iv) 0 , 1

உரு *03*

16. உரு 04 காட்டப்பட்டுள்ள L எனும் விளக்கானது ஒரு வீட்டின் படிக்கட்டின் மேலும் கீழும் உள்ள ஆளிகள் Aஆலும் Bஆலும் கட்டுப்படுத்தப்படும் . ஆளிகள் செயல்படும் விதம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது.
   - ஆளி A யும் ஆளி B யும் OFF எனின் விளக்கு“L”ஒளிரும்.
   - ஆளி A யும் ஆளி B யும் ON எனின் விளக்கு “L” ஒளிராது.
   - ஆளிகள் A யும் B யும் அவற்றின் எதிர் செயல்பாடுகளில் இருக்கும் போது விளக்கு “L” ஒளிரும்.




உரு 04

மேலே விவரிக்கப்பட்டுள்ள நிகழ்விற்கு பொருத்தமான தர்க்கவாயில் யாது?

   i) XOR   ii) NAND
   iii) NOR   iv) NOT

17. 1 PB க்கு சமவலுவான பெறுமானம் யாது?

   i) 1024X1024KB   ii) $2^{30}$ MB   iii) $10^{6}$ KB   iv) $2^{6}$MB

18. பின்வருவனவற்றில் தசம எண் $691_{10}$ பொருத்தமான பெருமானம் யாது ?

i) $1010110010_2$ ii) $1010110000_2$ iii) $2B3_{16}$ iv) $1262_8$

19. "ASCII' குறிமுறையில் "COVID" எனும் சொல் சரியாக வகைகுறிப்பது ?
i) 1000011 1001111 1010110 1001001 1000100
ii) 1000111 1101111 1110110 1101001 1100100
iii) 1000011 1101110 1110110 1101001 1100100
iv) 1000111 1101111 1110010 1101001 1100100


20. தரணி, ஹிருன் மற்றும் மிஹின் ஆகியோர் ஒரே குடும்பத்தின் மூன்று சகோதரர்கள். அவர்களின் வயதுகள் முறையே $12_{16}$, $01111_2$, $22_8$. அவர்களின் வயது தொடர்பான பின்வரும் கூற்றுக்களை கருதுக.

A. குடும்பத்தில் வயதில் குறைந்தவர் ஹிருன் ஆவார்
B. தரணி மற்றும் ஹிருன் இரட்டையர்கள்.
C. தரணி மற்றும் மிஹின் இரட்டையர்கள்.
D. மிஹின் மூன்று ஆண்டுகளால் ஹிருனை விட மூத்தவர்.

மேற்குறிப்பிட்ட கூற்றுகளில் சரியானது / சரியானவை

i) A ,D ii) A, B iii) A, C, D iv) B, C, D

21 உரு 5 இல் காட்டப்பட்டுள்ளவாரு ஒரு படவில்லையின் பாங்கை முதல் வடிவத்திலிருந்து இரண்டாவது வடிவத்திற்கு மாற்றுவதற்கு இலத்திரனியல் நிகழ்த்துகை மென்பொருளில் எந்த அம்சத்தைப் பயன்படுத்தலாம்



i) படவில்லை வடிவம் (Slide Design)
ii) படவில்லை வரிசையாக்கி (Slide Sorter)
iii) படவில்லை தளக்கோலம் (Slide Layout)
iv படவில்லை பார்வை (Slide View)

உரு 05

22. விரிதாள் மென்பொருளில் Ctrl + Home குறுக்குவழி சாவி பயன்படுத்தப்படுவது
i) கடைசி கலத்திற்கு உடனடியாக நகர்வதற்கு
ii) பணித்தாளின் முதல் கலத்திற்கு உடனடியாக நகர்வதற்கு
iii) எந்த நேரத்திலும் A1 கலத்திற்கு நகர்வதற்கு.
iv) விரிதாளை மூடுவதற்கு.

23. பின்வரும் சூத்திரம் =3^2/(34 -2^5)*6 விரிதாள் மென்பொருள் கலத்தில் நுழைக்கப்பட்டால் பெறப்படுவது
i) 0.75 ii) 18 iii) 27 iv) 8

24. A3 கலத்தில் பின்வரும் சூத்திரம் =SUM(MAX(A1:E1),MIN(A1:E1)) பிரதி செய்யப்பட்டால் பெறப்படும் விடை யாது?

| | A | B | C | D | E |
|---|---|---|---|---|---|
| 1 | 100 | 120 | 50 | 30 | 200 |
| 2 | | | | | |

i) 80 ii) 300 iii) 230 iv) 170

பின்வரும் அட்டவணைகள் சிற்றுண்டி(short eats) உணவுகளை தயாரிக்கும் மற்றும் விநியோகிக்கும் வியாபார நிறுவனம் ஒன்றிலிருந்து எடுக்கப்பட்ட தரவை காட்டுகின்றன. 25 , 26 ஆவது வினாக்களுக்கு விடையளிக்க கீழே கொடுக்கப்பட்டுள்ள அட்டவணைகளை பயன்படுத்துக.

Product அட்டவணை

| Pro_ID | Pro_Name |
|---|---|
| 0001 | Cutlet |
| 0002 | Roll |
| 0003 | Tea bun |
| 0004 | Egg bun |

Customer அட்டவணை

| Cus_ID | Cus_Name |
|---|---|
| C025 | Sunil Perera |
| C026 | Ramesh Gamage |
| C027 | NimalVithana |
| C028 | DamithSilwa |

Order அட்டவணை


| Pro_ID | Cus_ID |
|---|---|
| 0001 | C025 |
| 0002 | C025 |
| 0003 | C026 |
| 0003 | C027 |

25. மேலே உள்ள தரவுத்தளத்தின் முதன்மைச் சாவிகள்
   i) Product அட்டவணையில் உள்ள Pro_ID உம் Order அட்டவணையில் உள்ளCus_ID
   ii) Customer அட்டவணையில் உள்ள Cus_ID உம் Order அட்டவணையில் உள்ளPro_ID
   iii) Product அட்டவணையில் உள்ள Pro_ID உம் Customer அட்டவணையில் உள்ளCus_ID
   iv) Customer அட்டவணையில் உள்ள Cus_ID உம் Product அட்டவணையில் உள்ள Pro_Name

26 Order அட்டவணையில் காணப்படும் புலங்களினதும் பதிவுகளினதும் எண்ணிக்கைகள் முறையே

   i) 5 உம் 2   ii) 2 உம் 5   iii) 4 உம் 2   iv) 2 உம் 4

27. பின்வரும் செம்மை நடப்பு வழக்கு ஒழுங்கு (URL)இனைக் கருதுக.




A, B, C, D என்பன முறையே
   i) செம்மை நடப்பு வழக்கு,ஆள்களப் பெயர், உயர்மட்ட ஆள்களப் பெயர், வளக் கோப்பு
   ii) செம்மை நடப்பு வழக்கு, உலகளாவிய வலை , ஆள்களப் பெயர், உயர்மட்ட ஆள்களப் பெயர்
   iii) உலகளாவிய வலை , ஆள்களப் பெயர், உயர்மட்ட ஆள்களப் பெயர், வளக்கோப்பு
   iv) உலகளாவிய வலை , ஆள்களப் பெயர்,உயர்மட்ட ஆள்களப் பெயர், வளம்

28. பின்வருவனவற்றில் IP முகவரி பற்றிய பிழையான கூற்று?
   i) ஒரு வலையமைப்பில் உள்ள பல கணினிகள் ஒரே IP முகவரியைக் கொண்டிருக்கும்.
   ii) இணையத்தில் இணைந்துள்ள ஒவ்வொரு கணினியையும் அதன் IP முகவரிகள் மூலம் தனித்துவமாக அடையாளம் காண முடியும்.
   iii) IP முகவரி இணைய சேவை வழங்குனரால் வழங்கப்படுகிறது
   iv) IP முகவரிகள் தசம புள்ளிகளால் வேறாக்கப்பட்ட 0 முதல் 255 வரையான நான்கு பெறுமானங்களினால் வகைகுறிக்கப்படும்.

29. கீழே தரப்பட்டுள்ள வருவிளைவு குறிக்கும் சரியான HTML குறிமுறை கூற்றைத் தெரிவு செய்க?

<table>
<tr><td rowspan="2">Animal</td><td>Bird</td><td>Cat</td><td>Dog</td></tr>
<tr><td>2 Legs</td><td colspan="2">4 Legs</td></tr>
</table>

i)

```
<TABLE BORDER = "1"
CELLPADDING="5">
<TR>
<TD ROWSPAN="2">Animal</TD>
<TD>Bird</TD>
<TD>Cat</TD>
<TD>Dog</TD>
</TR>
<TR>
<TD>2 Legs</TD>
<TD>4 Legs</TD>
</TR>
</TABLE>
```

ii)

```
<TABLE BORDER = "1">
<TR>
<TD ROWSPAN="2">Animal</TD>
<TD>Bird</TD>
<TD>Cat</TD>
<TD>Dog</TD>
</TR>
<TR>
<TD>2 Legs</TD>
<TD COLSPAN="2">4 Legs</TD>
</TR>
</TABLE>
```

iii)

```
<TABLE BORDER = "1"
CELLPADDING="5">
<TR>
<TD ROWSPAN="2">Animal</TD>
<TD>Bird</TD>
<TD>Cat</TD>
<TD>Dog</TD>
</TR>
<TR>
<TD>2 Legs</TD>
<TD COLSPAN="2">4 Legs</TD>
</TR>
</TABLE>
```

iv)

```
<TABLE BORDER = "1">
<TR>
<TD>Animal</TD>
<TD>Bird</TD>
<TD>Cat</TD>
<TD>Dog</TD>
</TR>
<TR>
<TD>2 Legs</TD>
<TD>4 Legs</TD>
</TR>
</TABLE>
```

30. HTML ஆவணம் ஒன்றில் மீயிணைப்பு ஒன்றினை உள்ளீடு செய்ய பயன்படும் குறிமுறை யாது?

i) <a>http://www.youtube.com </a>


ii) <a name=" http://www.youtube.com">video</a>

iii) <a href=" http://www.youtube.com">video.com</a>

iv) <a href=" http://www.youtube.com">video</a>

31. பின்வரும் பாய்ச்சல் கோட்டுப் படத்தின் வருவிளைவு யாது?

i) 5
ii) 0
iii) 6
iv) 4




32. ஒரு குறிப்பிட்ட கணினி நிகழ்ச்சி நிரலை தொகுக்கும் (compile) போது அது எந்த பிழையையும் காட்டாது, ஆனால் நிகழ்ச்சி நிரலில் ஒரு உள்ளீடு நுழைக்கப்பட்டதும் அது தவறான வெளியீட்டை உருவாக்குகிறது. இந்த நிகழ்ச்சி நிரலில் உள்ள பிழை எதுவாக இருக்கலாம்,

i) தருக்க பிழைகள்(Logical Errors)
ii) தளவமைப்பு பிழைகள்(Layout Erros)
iii) இயங்கு நேர பிழைகள் (Running Time Errors)
iv) செயலியின்பிழைகள்(Operator Errors)

33. கீழே தரப்பட்டுள்ள Pascal குறிமுறையில் “Sri Lanka” எனும் சொல் எத்தனை தடவைகள் வருவிளைவாக பெறப்படும்?


```
Var X:integer;
Begin
    X:=1
    While X<=4  DO
        begin
        Writeln('Sri Lanka');
        X:=X+1;
        End;
    Readln( );
End.
```

i) 2    ii) 3    iii) 4    iv) 5

34. அனுராதா தனது புகைப்படத்துடன் இணையத்திலிருந்து எடுக்கப்பட்ட வேறு சில படங்களையும் GIMP மென்பொருளைப் பயன்படுத்தி திருத்துகிறார். ஒரு பட்டாம்பூச்சியின் ஒரு பகுதியை அவர் ஒரு படத்திலிருந்து அழிக்க முயன்றாலும் கூட அதை நிறைவேற்ற முடியவில்லை. அச் செயலை நிறைவேற்ற முடியாமைக்கான காரணம் யாது?

i) எல்லா அடுக்குகளிலிருந்தும்( layer) பட்டாம்பூச்சியின் அடுக்கைத் தேர்ந்தெடுக்காமை
ii) அழிப்பான் கருவி பின்னணி படங்களுக்கு மட்டுமே பயன்படுத்த முடியும்
iii) குறிப்பிட்ட படம் சேமிக்கப்படாமை
iv) அழிப்பான் கருவியைப் பயன்படுத்துவதற்கு முன்பு அழிக்க வேண்டிய பகுதியைத் தேர்ந்தெடுக்காமை.

Audacity மென்பொருளைப் பயன்படுத்தி உருவாக்கிய பதிவையும் அதன் கருவிகளையும் பயன்படுத்தி 35 , 36 ஆம் வினாக்களுக்கு விடையளிக்குக







35. B பகுதியைத் தவிர பதிவுசெய்யப்பட்ட ஒலித்தொகுப்பின் மற்ற எல்லா பகுதிகளையும் அகற்ற பயன்படும் கருவி,

i) 1 ii) 2 iii) 3 iv) 4

36. தரிந்து, பகுதி Aஇன் சத்தத்தை(volume) அதிகரிக்கும் , அதே நேரத்தில் அவர் B பகுதியை முடக்குகிறார் (mute) மற்றும் பதிவுசெய்யப்பட்ட ஒலி(audio)C பகுதியை அகற்றுகிறார். மேற்கூறியவற்றைச் செயல்படுத்த, அவர் பயன்படுத்த வேண்டிய கருவிகள் முறையே

i) 2 → 1 → Delete → 1 → 3 ii) 1 → 2 → 1 → 4 → 1 → Delete
iii) 1 → 2 → 1 → 3 → 1 → Delete iv) 2 → 3→ 1 → Delete

37. மின்னலின் போது ஒரு உயர் காந்தப்புலம் உருவாகுவதன் மூலம் கணினியுடன் இணைக்கப்பட்ட வடங்களினூடாக அதிக மின்சாரம் கடத்தப்படுவதால் கணினி பாகங்கள் எரிக்கப்படலாம். பின்வரும் எந்த செயற்பாட்டினால் கணினியை மேற்குறித்த தீங்குகளிலிருந்து பாதுகாக்க முடியும்

i) மேலதிக இடர் ஆளி (trip switch) ஒன்றை இணைத்தல்
ii) எழுச்சி பாதுகாப்பியை (surge protector) இணைத்தல்
iii) தடைபடாத மின்சார வழங்களை (UPS) இணைத்தல்
iv) நிலக்கீழ் வடங்களின் (plug) எண்ணிக்கையை அதிகரித்தல்

38. 2015 ஆம் ஆண்டில் சனத்தொகை மற்றும் புள்ளிவிவரத் துறையினர் நடத்திய ஒரு கணக்கெடுப்பிற்கு அமைய, இலங்கையின் கணினி கல்வியறிவு 26.8% என்று தெரிய வந்துள்ளது. இந்த குறைந்த கல்வியறிவு வீதத்திற்கு இலக்கமுறை பிரிவும் ஒரு காரணம் என்று முடிவு செய்யப்பட்டுள்ளது. பின்வரும் கூற்றுக்களை கருதுக

A – குறைந்த வருமானம் உள்ள குடும்பங்களுக்கு கணினியை கொள்வனவு செய்வதற்கு குறைந்த வட்டியுடன் கடன் வசதிகளை வழங்குதல்.

B –கணினி வசதிகள் இல்லாத கிராமப்புறங்களுக்கு கணினி மற்றும் இணைய வசதிகளை வழங்குதல்.

C–அதிகமான புலமைப் பரிசில்களை 5ஆம் வகுப்பு மாணவர்களுக்கு வழங்குதல்

மேற்கூறப்பட்ட கூற்று / கூற்றுக்களில் இலக்கமுறை பிரிவை குறைப்பதற்கு பங்களிப்புச் செய்பவை

i) A மட்டும் ii) B மட்டும் iii) A , B மட்டும் iv) B ,C மட்டும்

39. ஒரு மாணவன் தனது செயற்திட்டத்திற்கு குறிப்பிட்ட ஒரு இணையத்திலிருந்து பெற்றுக் கொள்ளப்பட்ட ஒரு ஆவணத்தை பயன்படுத்தினான். அவனது செயற்திட்டத்தின் கடைசிப் பக்கத்தில் குறிப்பிட்ட இணையத்தின் பெயரையும் குறிப்பிட்டான். பின்வருவனவற்றில் எதற்கு மேற் குறித்த நிகழ்வு உதாரணமாக அமையும்?

i) ஒரு கணினி நெறிமுறை
ii) ஒரு பாதுகாப்பு ஒழுங்கு
iii) ஒரு மென்பொருள் திருட்டு
iv) ஒரு சமூகப் பிரச்சினை

40. இணைய உரையாடலில் ஈடுபடுதல் சம்பந்தமான பிழையான கூற்று

i) புவியியல் எல்லைகளுக்கு அப்பால் விசைப்பலகை துணைகொண்டு எந்த தூரத்தில் உள்ள நபருடனும் நேரடி தொடர்பாடலை ஏற்படுத்த முடியுமாதல்.
ii) உரையாடலில் உள்ள தருணத்திலேயே உரையாடுபவர்களின் காணொளிப் படங்களை பெற்றுக் கொள்ள முடியுமாக உள்ளமை
iii) உரையாடலிற்கு எவ்வித இடையூருமின்றி குறுஞ்செய்திகளை அனுப்ப முடியுமாக இருத்தல்.
iv) இணைய வசதியுள்ள எந்தக் கணிணியிலிருந்தும் குறுஞ்செய்திகளை ஒன்றுக்கொன்று பரிமார வசதியாக இருத்தல்.